# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8108533
C

1. District மாவட்டம் : Tiruppur PS காவல்நிலையம் : VSAC Year ஆண்டு : 2022 FIR No. மு.த.அ. எண் : 4/2022/AC/TPR Date நாள் : 17.03.2022

2. (i) Act சட்டம் : The prevention of Corruption Sections பிரிவுகள் : 7
(ii) Act சட்டம் : Act 1988 as amended by the Sections பிரிவுகள் :
(iii) Act சட்டம் : PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள் :
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 09.03.2022 Date to நாள் வரை : 16.03.2022
Time Period நேர அளவு : Time from நேரம் முதல் : 11.30 hrs Time to நேரம் வரை : 16.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.03.2022 Time நேரம் : 07.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 17.03.2022 Time நேரம் : 07.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — At about 65 KM South
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி Thottampatti VAO Office, Udumalpet Taluk, Tiruppur District
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : M. Jayaraman (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் : K. Malaiappan
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு : 48 years (d) Nationality நாட்டினம் : Indian (e) Passport No. வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் : —
Date of Issue வழங்கப்பட்ட நாள் : — Place of Issue வழங்கப்பட்ட இடம் : —
(f) Occupation தொழில் : Workshop (g) Address முகவரி : Door No. 1/138, Jayasakthi Illam, Dharapuram road, Unjavelampatti Post, Pollachi Taluk Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவைப்படின் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Veluswamy Village Administrative Officer, Thottampatti village, Udumalpet Taluk, Tiruppur District

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(Signature) 17/3/2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

K. Sasilekha 17-03-2022
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 17.03.2022
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. Sasilekha
Rank: நிலை Inspector of Police
VSAC, Tiruppur

GCP 240 34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்ப மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்றஎண். 4/2022/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் K.சசிலேகா ஆகிய நான் 17.03.2022-ம் தேதி காலை 07.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது M.ஜெயராமன், த/பெ. K.மலையப்பன், கதவு எண்.1/138, ஜெயசக்தி இல்லம், தாராபுரம் ரோடு, ஊஞ்சவேலாம்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி தாலுக்கா, கோயம்புத்தூர் என்பவர் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் M.ஜெயராமன், த/பெ. K.மலையப்பன், கதவு எண்.1/138, ஜெயசக்தி இல்லம், தாராபுரம் ரோடு, ஊஞ்சவேலாம்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி தாலுக்கா, கோயம்புத்தூர். செல்நம்பர் 9524563591 பெறுநர் மதிப்புமிகு ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, திருப்பூர். அய்யா, நான் கோவை மாவட்டம், பொள்ளாச்சி தாலுக்கா, தாராபுரம் ரோடு, ஊஞ்சவேலாம்பட்டி அஞ்சல், கதவு எண்.1/138, ஜெயசக்தி இல்லத்தில் குடும்பத்துடன் வசித்து வருகின்றேன். நான் குரு காட்டேஜ் என்ற பெயரில் கிரில் ஒர்க்ஷாப் நடத்தி வருகிறேன். திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் டவுன், பழைய ஹவுசிங் போர்டு என்ற முகவரியைச் சேர்ந்த முத்துச்சாமி என்பவரது மனைவி ராஜம்மாள் மற்றும் அவரது வாரிசுகளிடமிருந்து திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தொட்டம்பட்டி கிராமம் க.ச.எண்.122/5ல் உள்ள 1.28 ஏக்கர் நிலத்தை ரூ.5,17,000/-க்கு எனது பெயரில் கோமங்கலம் சார்பதிவாளர் அலுவலக கிரய ஆவண எண் 3894/2021 நாள்.1.11.2021ன் படி வாங்கினேன். மேலும் உடுமலைப்பேட்டை பொட்டையம்பாளையத்தைச் சேர்ந்த வெங்கடாச்சலம் செட்டியார் மகன் தங்கராஜ் என்பவருக்கு சொந்தமான தொட்டம்பட்டி கிராமம் புல எண்.122/4ல் உள்ள 1.20 ஏக்கர் நிலத்தை எனது பெயரில் ரூ.3,21,500/-க்கு கோமங்கலம் சார்பதிவாளர் அலுவலக கிரைய ஆவண எண். 3895/2021 நாள் 1.11.2021ன் படி வாங்கினேன். மேற்படி இரண்டு நிலங்களையும் எனது பெயரில் பட்டா மாறுதல் செய்ய கோமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து தொட்டம்பட்டி கிராம நிர்வாக அலுவலகத்திற்கு ஆன்லைனில் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இதில் ஆவண எண் 3894/2021க்கு பட்டா எண் 2116 ன் படி

3.12.2021-ம் தேதி பட்டா மாற்றம் செய்யப்பட்டிருந்தது. ஆவண எண் 3895/2021க்கு பட்டா மாறுதல் ஆகவில்லை. அதன் பின்னர் நான் 2022 ம் வருடம் ஜனவரி மாதம் கடைசியில் திருப்பூர் மாவட்டம், உடுமலை வட்டம், தொட்டம்பட்டி கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று கிராம நிர்வாக அலுவலர் திரு. வேலுசாமி அவர்களைப் பார்த்து ஆவண எண் 3895/2021க்கு பட்டா மாறுதல் சம்பந்தமாக கேட்டேன். அதற்கு அவர் சர்வர் பிரச்சினை இருப்பதால் செய்ய முடியவில்லை சீக்கிரமாக முடித்து தருகிறேன் என்று சொன்னார். அதன் பின்னர் அவரை இரண்டு மூன்று முறை சென்று பார்த்தபோது வேலையை முடித்து தருவதாக சொல்லி காலம் தாழ்த்தி வந்தார். இதற்கிடையே மேலும் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தொட்டம்பட்டி கிராமம் பொட்டையம்பாளையத்தைச் சேர்ந்த மாரியப்பன் செட்டியார் வாரிசுகளிடமிருந்து தொட்டம்பட்டி கிராமம் புல எண்.122/3ல் உள்ள 1.28 ஏக்கர் நிலத்தை ரூ.9,50,000/-க்கு கோமங்கலம் சார்பதிவாளர் அலுவலக கிரைய ஆவண எண். 1106/2022 நாள் 7.3.2022 ன் படி எனது மனைவி புஷ்பாதேவி பெயரில் வாங்கினேன். இதனைத்தொடர்ந்து 9.3.2022ம் தேதி காலை சுமார் 11.30 மணியளவில் தொட்டம்பட்டி கிராம நிர்வாக அலுவலகம் சென்று கிராம நிர்வாக அலுவலர் திரு.வேலுசாமி அவர்களிடம் ஆவண எண்கள் 3895/2021 மற்றும் 1106/2022க்கு பட்டா மாறுதல் செய்ய பரிந்துரை செய்ய இதற்குரிய ஆவணங்களை இணைத்து 2 மனுக்களாக தனித்தனியாக கொடுத்தேன். எனது மனுக்களை பெற்றுக்கொண்ட கிராம நிர்வாக அலுவலர் பட்டா மாறுதல் பரிந்துரை செய்ய ஒன்றுக்கு ரூ.4000/- விதம் தனக்கு தனியாக தர வேண்டும் என்றும் நீங்கள் இரண்டு பட்டா மாறுதல் செய்ய கேட்டுள்ளீர்கள். இரண்டு பைலுக்கும் சேர்த்து ரூ.8000/- தனியாக வேண்டும் என்றும் கேட்டார். இதற்கு நான் பணம் கொடுக்க வேண்டுமா என்று கேட்டேன். அதற்கு அவர் பார்மாலிட்டி இருக்கிறது என்று சொல்லி சற்று குறைத்து இரண்டு பைலுக்கும் சேர்த்து ரூ.7000/- கொடுங்கள் என்று கேட்டார். அதற்கு நான் முடியாது என்று சொல்ல ரூ.6500/- கொடுக்கவில்லையென்றால் மேற்படி வேலையை செய்ய முடியாது என்று சொன்னார். அப்போது அவர் எனது செல்போன் எண்ணை வாங்கிவிட்டு அவரது செல்போன் எண்ணை எனக்கு கொடுத்தார். அதன்பின்னர் நான் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். இந்நிலையில் 11.3.2022ம் தேதி காலை சுமார் 7 மணியளவில் VAO வேலுசாமி அவர்கள் எனது செல்போனிற்கு போன் செய்து பணத்தை ரெடி பண்ணிவிட்டீர்களா என்று சொல்லிவிட்டு நீங்கள் பணத்தை எவ்வளவு சீக்கிரமாக

கொடுக்கிறீர்களோ அப்போதுதான் வேலையை சீக்கிரமாக முடித்து தர முடியும் என்றும் சீக்கிரமாக பணத்தை ரெடி பண்ணி போன் செய்து விட்டு வாங்க என்று சொன்னார். அதற்கு நான் சரி பார்க்கலாம் என்று சொல்லி போனை வைத்துவிட்டேன். அதன் பின்னர் 14.3.2022 காலை சுமார் 11.00 மணியளவில் VAO திரு.வேலுசாமி அவர்கள் எனது செல்போனுக்கு தொடர்புகொண்டு நீங்கள் பணம் ரூ.6500/- கொடுத்தால்தான் வேலையை சீக்கிரமாக முடித்து தரமுடியும் என்று சொன்னார். அதற்கு நான் வெளிவேலையாக இருப்பதால் வருவதற்கு இரண்டு நாட்கள் ஆகும் என்று சொன்னேன். அதற்கு அவர் பணத்தை ரெடி பண்ணிவிட்டு வாருங்கள் என்று சொன்னார். இந்நிலையில் 16.3.2022ம் தேதி மாலை சுமார் 4 மணியளவில் VAO திரு.வேலுசாமி அவர்கள் எனது செல்போனுக்கு தொடர்புகொண்டு எப்போது பணத்துடன் வந்து பார்ப்பீர்கள் என்று கேட்டார். அதற்கு நான் நாளை வந்து பார்ப்பதாக சொன்னேன். அதற்கு அவர் நாளை மதியம் 1 மணிக்குள் வந்து பார்க்க சொன்னார். நான் VAO திரு.வேலுசாமி அவர்களுக்கு இரண்டு பட்டா மாறுதல் செய்ய பரிந்துரை செய்ய லஞ்சமாக பணம் ரூ.6,500/- கொடுக்க விருப்பமில்லை. எனவே அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.இப்படிக்கு Sd/- xxxx M.Jayaraman, 17/3/2022 Sir, Received the complaint on 17.03.2022 at 07.00 hrs and conducted enquiry between 07.00 hrs to 07.30 hrs and registered a case in Tiruppur V&AC Cr.No.04/2022/AC/TPR u/s 7 of PC Act 1988 as amended by the PC (Amendment) Act 2018 at 07.30 hrs. Sd/- xxxx (K.Sasilekha). 17.03.2022 Inspr. V&AC, TPR.

Original FIR along with original written complaint of M.Jayaraman, S/o.Malaiappan, D.No.1/138, Jayasakthi illam, Dharapuram road, Oonchavelampatti Post, Pollachi Taluk, Coimbatore is submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chief Judicial Magistrate Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

17.03.2022
(K.Sasilekha),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur.